விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 | தை 12 | ஐ. அவ் 14 | இதழ் 348
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 25-1-1986

## "எமது உரிமைகள் மறுக்கப்படுவதை உலக நாடுகளுக்கு தெரியப்படுத்தவேண்டும்"

### பேராசிரியர் சிவத்தம்பி கருத்து

(ஐ. சண்முகலிங்கம்)

"இந்தநாட்டுப் பிரஜைகளாகிய எமது உரிமைகள் மறுக்கப்படுகிறது. இதனை பிரஜைகளின் எதிர்ப்பாக அரசாங்கத்துக்கும், சர்வதேச மட்டத்துக்கும் எடுத்துத்தெரிவிக்கவேண்டும். பாதுகாப்பு வலயம் வந்த பின்தான் எமது மக்கள் ஆபத்து ஏற்பட்டுள்ளது, என்பதை அறிந்து பயப்படுகின்றனர். இங்கு வந்துள்ளவர்கள் அனைவரும் பாதுகாப்பு வலயத்தை எதிர்க்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர். பாதுகாப்பு வலயத்தை முதன் முதலாக எதிர்க்கின்ற முதலாவது அமைப்பு இன்றுகூடி இருக்கும் சகலரைக்கொண்ட அமைப்பேயாகும்."

[5-ம் பக்கம் பார்க்க]

## இன்றும் நாளையும் மறியல் இல்லை

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்து எதர்ப்புத் தெரிவித்து யாழ். கச்சேரி முன்பாக நடத்தப்பட்டு வரும் மறியல் போராட்டம் இன்று நடைபெறமாட்டாது என்று அன்

(5ம் பக்கம் பார்க்க)

● இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி விரிவாக ஆராய

# அமெரிக்கஈழசங்கத்துக்கு இஸ்ரேல் அரசு அழைப்பு

## நாவற்குழியில் பீரங்கித் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நேறறிரவு6-30மணி தொடக்கம் பீரங்கிக்குண்டுகள் தீர்க்கப்பட்டதைத்

(5-ம் பக்கம் பார்க்க)

## சுப்பிரமணிய சுவாமியும் கலந்துகொள்வார்

(வாஷிங்டன்)

இலங்கைத் தமிழர் பிரச்னை - இதன் அடிப்படையில் நடைபெறும் இனப் படுகொலைகள் குறித்து விரிவாக ஆராய்வதற்காக அமெரிக்காவிலுள்ள ஈழச்சங்கப் பிரதிநிதிகளும், இந்திய லோக்தள் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணியசுவாமியும் இஸ்ரேல் அரசாங்கத்தினால் அழைக்கப்பட்டுள்ளனர்,

வாஷிங்டனிலுள்ள இஸ்ரேலியத் தூதரகத்தில் வைத்து, இந்த அழைப்பு மேற்படி பிரமுகர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

### அரசியல் உடன்பாடு

"ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொள்ளும் இனப்படுகொலைகளை நிறுத்தி, தமிழ் மக்களுடன் அரசியல் உடன்பாடு ஒன்றுக்கு ஜெயவர்த்தனு அரசு முன்வர வேண்டும்" என்று அமெரிக்க அரசு அதிகாரிகளையும் இஸ்ரேலிய ராஜதந்திரி ஒருவரையும் வாஷிங்டனிலுள்ள இஸ்ரேலியத்தூதரகத்தில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்திய அமெரிக்க ஈழசங்கத்தின் பிரதிநிதிகளும், டாக்டர் சுப்பிரமணிய சுவாமியும் வலியுறுத்தியுள்ளனர்.

இச்சந்திப்பு கடந்த இருபதாம் திகதி நடைபெற்றது,

இலங்கைத் தமிழர் பிரச்னையை உலக ரீதியில் பரப்பும் ஒரு கட்டமாகவே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைத் தமிழர் நிலை குறித்து ஆராயப்பட்ட இச்சந்திப்பின் போது அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தெற்கு ஆசியாவிற்கான இயக்குநர் திரு ஆர். ஜி. சிமித், வெளிநாட்டு உறவுகளுக்கான கமிட்டியின் சென்ட் தலைவர் செனட்டர் ஆர் லூக்கர் உட்பட 4 செனட்டர்கள் கலந்து கொண்டனர்.

அமெரிக்க ஈழசங்கத்தின் சார்பாக அதன் பிரதிநிதிகளாக திரு. ஸ்ரீ தில்லையம்பலம், திரு. ஸ்ரீதரன் ஆகியோரும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமியும் இடம்பெற்றனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

வசாவிளானில்—

## இளைஞர் சடலம் எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வசாவிளானில் இளைஞர் ஒருவரின் சடலம் வீடொன்றுக்குள் வைக்கப்பட்டு தீவைக்கப்பட்டதாகத் தெரியவநதுள்ளது.

நேற்று முன்தினம் தல்லிப்பழையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வசாவிளான் பகுதியிலுள்ள இரு இளைஞர்களை வழிகாட்டியாக தம்முடன் அழைத்து வந்ததாகவும் பின்னர் திரும்பவும் அவ்விடத்தில் விட்டு அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம்செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதில் ஒரு இளைஞர் பலியானூர், மற்றவர் படுகாயமுற்

(5-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி ரயில் சேவை மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கானரயில்சேவைகள் இம்மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இப்புதிய அறுவித்தலின்படி

[ ம் பக்கம் பார்க்க]

## வலி. வடக்கில் நேற்றும் ஹெலிகொப்டரிலிருந்து சூடு

### இருவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

இரண்டாவது நாளாகவும் ஹலிகொப்டரிலிருந்து துப்பாக்கிச்சூடும் குண்டுவீச்சும் தெல்லிப்பழை, கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகளில் நேற்றுக்காலை தொடர்ச்சியாக இடம்பெற்றன.

தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களுள் ஒருவரான மித்திரதேவா பாலேந்திராவின் மரணச்சடங்கில் நேற்றுப் பங்குபற்ற வந்திருந்தவர்களில் இருவர் ஹெலிகொப்டர் சூட்டில் படுகாயமடைந்தனர். ஒருவர் ஆபத்தானநிலையில் யாழ் ஆஸ்

[8-ம் பக்கம் பார்க்க]

## பொருத்தமற்றது என்கிறார் சரத்

(கொழும்பு)

"நாடு யுத்தம் ஒன்றை எதிர்நோக்கும் வேளையில், பிரச்னைகள் மோசமான நேரத்தில் இப்படியான சட்ட மூலம் ஒன்றைச் சமர்ப்பிப்பது பொருத்தமற்றதாகும்" என்று கலவான எம் பி சரத் முத்தெட்டுவேகம நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

ஜனநிபதி உறுப்புரிமைகள் மீதான சட்ட மூலத்தின் மீது அவர் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். [ய-பி]

பலாலி முகாமை அடுத்துள்ள பகுதிகளில்

## மக்கள் வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர்!

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவமுகாமுக்கு அண்மித்த கிராமங்களில் வாழும் மக்கள், பதற்றநிலை காரணமாகவீடுவாசல்களையும் சொத்து சுகங்களையும் இழந்து குடும்பங்களாக வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன், கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், வசாவிளான், மயி

[8-ம் பக்கம் பார்க்க]

## சிறிமாவோ பலத்த ஆட்சேபம்

(கொழும்பு)

"இலங்கையிலுள்ள மலைப் பிரதேசங்களில் வாழும் சிங்களமக்கள் அங்கு தோட்டங்களில் பணிபுரியும் இந்திய மக்களுடன் யுத்தம்புரிய தயாராக வேண்டும்" என்று இலங்கையின் முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா

[5ம் பக்கம் பார்க்க]

மங்களகரமான திறப்பு விழா

சோபிகா நகை மாளிகை



25-01-1986 சனிக்கிழமை
காலை 9-00 -- 9-25 வரையுள்ள
சுபவேளையில் மங்களகரமாகத் திறந்து வைக்கப் படுகிறது

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆர். செல்வராஜா

SOPIKA
JEWEL HOUSE

111 1/1, கஸ்தூரியார் விதி,
யாழ்ப்பாணம். C 340

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்கள் மலிவு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்க: 'இரத்தினவாசா' கருவேலடி லேன், (பழைய ஸ்ரேசன் வீதி) கொக்குவில் கிழக்கு.
C 365

300 அடி நீளமான 2'' அல்கத்தீன் பைப் விற்பனைக்குள்ளது. சிறிதளவு மட்டுமே பாவித்தது. அத்துடன் வயரிங் செய்ய உகந்த புதிய ½'' P. V. C. குழாய்கள் 23 விற்பனைக்குண்டு. C. T. அன்ரனிராஜா, அமலிவனம் சில்வா வீதி, வட்டக்கச்சி. A 122

நல்ல நிலையில் குறைந்த விலையில் வீடியோ டெக், தமிழ், ஆங்கிலம் வீடியோ கசட்ஸ் ரேடியோவுடன் சேர்ந்த மினி கசட் பிளேயர், ஒரேமுறையில் 100 கோழிக்குஞ்சுகளை பெறக்கூடிய இங்குப்பேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 1, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். C 367

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள், Nel Farm பிறவுண் சேவற் குஞ்சுகள் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்சப்படும். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். C 360


ஹொண்டா ஜெனறேட்டர் 1500 வாட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: சொனிக்ஸ் மினி சினிமா, யாழ். வீதி, மானிப்பாய். [C 371]

பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாகச் சகல வசதிகளும் உடைய புதிய வீடும், 6½ பரப்பு வளவும் உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும் கு. நம்பிராசா. வர்த்தகர், பண்டத்தரிப்பு. [C 370]

PL-4 லேத் மெசின் உடன் விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 356]

Bairaha Farms புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 28ந்திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 53)

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, கட்டில்கள், றெக்கோட் பிளேயர், கம்பளங்கள், சிறிய அலுமாரிகள், மேசைகள், மின் உபகரணங்கள், Pyrex, கிளாஸ்வகைகள், செவிப்புலன் கருவிகள், Prstige Pressure Cooker புதியது, மற்றும் பலவித பொருட்களும் விற்பனைக்குண்டு. பத்மநாதன், C/o அம்பலவாணர், ஆடியபாதம் றோட் (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்)
(A 363)




## தவறிவிட்டது

கே. எஸ். கதிர்காமநாதன் 592822458 V அடையாள அட்டை 21-1-86-ந் திகதி வேலணை VTC-Tuition Centre இல் இருந்து யாழ். வரை, வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் J R, P. Agency, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகரில் ஒப்படைக்கவும். [C 369]

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 88 இரசாயனம். ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 26-01-86 (ஞாயிறு) 06-30 a. m. (சனி, ஞாயிறு 06-30 a. m.) பிரிவு II ஆரம்பம்: 27-01-86 நேரம் 4-45 p. m. (திங்கள், புதன் 4-30 p. m.) (C 315)

G.S.Q (Bio) (Botany, Zoology, Chemestry) நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G.S.Q (Maths) (Pure, Applied, Statistics. Chemistry, physics) விரைவில் ஆரம்பமாக உள்ளன. செய்முறைப்பயிற்சிகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளவும்: அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C325]

Home Science Diploma (மனையியல் டிப்ளோமா Stenography (Shorthand Typing English) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. Montessory Diploma Teachers Training (பாலர் பயிற்சி) ஆரம்பமாகவுள்ளது. Recognised Certificates will be issued. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளவும்: அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C326]

## கண்டெடுக்கப்பட்டது

இளவாலை பிரதான வீதியில் வீடியோவுக்கு உரிய ஒரு பாகம் என்னால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் மாலை 5-00 மணிக்கும் 7-00 மணிக்கு இடையில் ஒரு கிழமைக்குள் வந்து பெற்றுக்கொள்ளவும். பீற்றர் இமானுவல் No: 13, 4ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். C 349

## கொட்டடி அம்பாள் இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கொட்டடி (பண்ணை) ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான இரதோற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறுகின்றது. 26 ம் திகதி தீர்த்தோற்சவமும் 27 காலையில் பூம்புனல் நீராட்டு விழாவும் மாலையில் திருக்கல்யாணமும்தொடர்ந்து பூங்காவனமும் இடம்பெறும்.

## ஓராண்டு நினைவஞ்சலி

கைதடி
சங்கரன்
தியாகராஜா
(சின்னா)



திதி: 25-01-86 இன்று சனிக்கிழமை.

உன் நினைவு
என்றும் எம்முடன்
வாழும்.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்,
கைதடிமேற்கு,
கைதடி.

நா.சாம்பசிவம் அன் கோ
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். C368

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திரு. மாணிக்கம்
செல்லையா



தோற்றம்: 15-03-1930
மறைவு: 26-12-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை உயரவைக்க ஊக்கத்துடன் அயராது உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னுமல் முழங்காமல் திடீரென மறைந்தீர்களே! நீங்கள் மறைந்தும் மறையாதும் என்றும் அணையாத ஒளியாய் எங்கள் உள்ளத்தில் உறைந்திருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அன்னரின் இல்லத்தில் இன்று (25-1-86) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
C 364

## வலி.கிழக்கு வட பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி

### வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 6600 ஆறுயிரத்து அறுநூறு] வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/-ம் மீளத்தகாத பணமாக ரூபா 5/-ம் சங்கக் காரியாலயத்தில் 30-01-86ந் திகதிக்கு முன் கட்டி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 04-02-86 ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். விண்ணப்பிக்கும் போது என்வலப்பின் இடது பக்க மேல்மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' என்று குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
வலி. கிழக்கு வடபகுதி
பல நோக்குக்கூட்டுறவுச்
சங்கம்,
அச்சுவேலி.

[A 1:6]

## மழைநீர் பயிர் செய்கைத் திட்டம் கிளிநொச்சி

### முள்ளுக் கம்பிக்கான ஆணிகள் கொள்வனவு

1200 கிலோ கிறும் எடையுள்ள முள்ளுக் கம்பி அடிப்பதற்கான 'ப' ஆணிகள் கொள்வனவு செய்வதற்கான கேள்விகள். கிளிநொச்சி கச்சேரி கேள்விச்சபை தலைவரால் 07-02-1986 வரை ஏற்கப்படும்.

இவ் ஆணிகள் கிளிநொச்சி கச்சேரியில் கொண்டுவந்து விநியோகிப்பது வரையலான விலை விபரத்தை கேள்விச் சபைத் தலைவர், கச்சேரி, கிளிநொச்சி என்ற பெயருக்கு முத்திரையிடப்பட்ட கடிதம் மூலம் அறிவிக்கவும்.

செ. பத்மநாதன்,
மாவட்டக்காணி அதிகாரி,
உதவிக்காணி ஆணையாளர்,
கிளிநொச்சி.

செயலகம்,
கிளிநொச்சி,
21-01-1986 A 135

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சாவகச்சேரி துர்க்கையம்மன் தேவஸ்தானம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான குரோதன ஆண்டு தைத் திங்கள் 13-ம் நாள் (26-1-86) ஞாயிற்றுக்கிழமை மதிவளர் தைப்பூச நன்னாளன்று, காலை மகாகும்பாஷேகம் நிகழப்பெற்று புதுப்பொலிவுடன் எழுந்தருளியிருக்கும்,

ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத
சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு
அன்று மாலை 4-00 மணிக்கு
அன்னை அருள்மிகு துர்க்கையம்பாள் சன்நிதியில்!

### திருக்கல்யாண வைபவம்

நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

அடியார்கள் அனைவரையும் தமது சுற்றம்சூழ வருகைதந்து ஸ்ரீ முருகப்பெருமானின் மணக்கோலத்தைத் தரிசித்து பேறடையும் வண்ணம் அன்போடும் அருளோடும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
தங்களை அருள்பெற அழைக்கும்,
பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா
(ஆலய தர்மகர்த்தா)

ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானம்,
சாவகச்சேரி, 8-1-86. [C 324]

## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(வடமாகாணத்தில் O/L வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒருநிறுவனம்)

**O/L** DAY CLASSES
[8-30 a. m. — 1-30 p. m.]
ஆரம்பம்: 27-1-86

கணிதம் – திரு. தயாபரன்
விஞ்ஞானம் – திரு. ரவி

மற்றும் திறமையான ஆசிரியர்களினால் போதிக்கப்படுகிறது.

குறிப்பு:

பாடசாலையில் கல்வி பயில அனுமதி கிடைக்கவில்லையே என்ற கவலை வேண்டாம். எமது நிறுவனம் அந்தக் குறையை நிச்சயம் நிவர்த்தி செய்யும். (A 111)

வெஸ்ட்லன்ட் விவகாரம்

# திரு. பிரிட்டனை ராஜினாமாச் செய்ய திருமதி தாட்சர் வேண்டுகிறார்!

லண்டன், ஜன. 24

**பிரிட்டனின் 'வெஸ்ட்லண்ட்' ஹெலிகாப்டர் விவகாரம் பிரதமர் திருமதி மார்கிறெட் தாட்சருக்கு மேலும் பலத்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பிரிட்டனில் வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் திரு. லியோன் பிரிட்டனை ராஜினாமாச் செய்யும்படி திருமதி, தாட்சர் கேட்டுள்ளார்.**

திரு. பிரிட்டன், வெஸ்ட்லண்ட் விவகாரம் தொடர்பாக கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் ராஜினாமாச் செய்த தமது சகாவான பாதுகாப்பமைச்சர் திரு மைக்கேல் ஹெசல்ட்டைனில் ராஜினாமா தொடர்பான பத்திரமொன்றைப் பகிரங்கப்படுத்தியிருந்தார் என்பதனாலேயே திருமதி. தாட்சர் அவரை ராஜினாமாச்செய்யக் கோரியுள்ளார்.

திருமதி. தாட்சரின் இக்கோரிக்கைக்கு கன்சர்வேட்டிவ் எம். பிக்கள் பலத்த ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆயினும் திரு பிரிட்டனை ராஜினாமாச் செய்யக்கோரியிருப்பது திருமதி தாட்சருக்குப் புதிய நெருக்கடியை உண்டு பண்ணலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் திரு. பிரிட்டனும் கன்சர்வேட்டிவ் கட்சியில் செல்வாக்குமிக்க உறுப்பினராவார் [கி]

● லிபியக் கடலில்

# இராணுவ ஒத்திகைகளுக்கு அமெரிக்கா தயாராகிறது!

வாஷிங்டன், ஜன 24

லிபிய கடற்பிராந்தியத்துக்கு அண்மையில் அமெரிக்கா கடற்படை, விமானப்படை ஒத்திகைகளை நடாத்தவுள்ளது.

இந்த ஒத்திகைகளில் அமெரிக்காவின் 6 வது கடற்படை முக்கிய பங்கேற்கும். இந்த அணியில் விமானங்கள், நாசகாரிகள், நுருப்புகள் லிபிய கடற் பிராந்தியத்திற்கு வெளியே ஒத்திகைகளை மேற்கொள்ளும்.

இந்த ஒத்திகைக்கான மையப்பகுதியாக லிபிய கடற்பிராந்தியத்துக்கு அருகிலுள்ள 'சுவெட்டோ' என்ற வளைகுடாப் பிரதேசம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

இந்த அறிவிப்பையடுத்து லிபியா தனது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது. 'சுவெட்டோ' தனது பிராந்தியத்திலுள்ளதென லிபியா அறிவித்துள்ளது. அமெரிக்க ஒத்திகைக்கு மத்திய தரை நாடுகள் எதிர்ப்புக் காட்ட வேண்டுமெனவும் அது அவசர கோரிக்கை விடுத்துள்ளது. (கி)

## வேட்டைப் பிரியர்களுக்கு ஒரு செய்தி!

[கன்பரா]

**அவுஸ்திரேலிய அரசாங்கம் இவ்வருடம் சுமார் 25 லட்சம் 'கங்காரு'களைச் சுட்டுக்கொல்ல அனுமதி வழங்கியுள்ளது.**

அவுஸ்திரேலியாவின் 'தேசிய மிருகமான' கங்காருவை அதன் தோலுக்காகவும், இறைச்சிக்காகவும் அவுஸ்திரேலியர்கள் சுட்டுக் கொல்லுகின்றனர். இது வர்த்தகரீதியில் அனுமதிபெற்று நடைபெறுகிறது.

ஆயினும் அவுஸ்திரேலிய 'அபோரிஜன்ஸ்' என்ற பழமைவாதிகள் அரசாங்கத்தின் இந்த முடிவுக்குத் தாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கங்காரு இனத்தைப் பூரணமாக ஒழித்துக்கட்டுவது அவுஸ்திரேலிய அரசின் முக்கிய நோக்கமல்ல. இம்மிருகங்கள் அவுஸ்திரேலியாவின் பயிர்நிலங்கள், நெடுஞ்சாலைகள், விமான ஓடுபாதைகள், ரயில் பாதைகளில் அடிக்கடி வந்து குறுக்கிடுமளவிற்குப் பல்கிப் பெருகியுள்ளன. இதனாலேயே இவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இவற்றில் சில வீதத்தை ஒழிப்பதற்கு அவுஸ்திரேலிய அரசு முடிவுசெய்துள்ளது.

இம்முடிவை அடுத்து பல சர்வதேச வேட்டைப் பிரியர்கள் அவுஸ்திரேலியாவுக்குத் தமது 'ரைபிள்'களுடன் விமானமேறியுள்ளனர். [செ]

## இங்கு மறியல் நடக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று மறியல் போராட்டம் நடைபெறவில்லை. ஆனாலும் இக்காரியாலய ஊழியர்களும் கந்தோருக்குச் சமூகம் தரவில்லை. (ஐ)

# '5 லட்சம் பேரும் மலைநாடு கோரி போராடலாம்!' சிறில்மத்யூ ஆரூடம்

[கொழும்பு]

''ஐந்து லட்சம் இந்தியத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. சிறிது காலம் செல்ல அவர்களும் வேறு ஓர் நாடு கேட்டுப் போராடுவார்கள்'' என்று களனி தொகுதி எம். பி சிறில் மைத்தியூ நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் நேற்றுப் பேசிய அவர்; தமிழ்மொழி பேசுபவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக இந்தியா தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளித்துவருகிறது. அப்படியானால் இந்தியாவையே தாயகமாகக்கொண்ட இந்தியத் தமிழர்கள் மலைநாடு கேட்டுப் போராடும்போது இந்தியா அவர்களுக்கு எந்த விதத்தில் ஆதரவு வழங்கும் என்பதனை கூறவேண்டிய தேவையில்லை. இந்த ஐந்து லட்சம் பேரில் எத்தனைபேர் கள்ளத் தோணிகளோ தெரியவில்லை. எத்தனைபேர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கொண்டுவரப் பட்டவர்களோ தெரியாது'' என்றும் அவர் தெரிவித்தார்

சிறில் மைத்தியூ பேசுவதற்கு எதிர்கட்சியைச்சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் தலா 5 நிமிடம் என்ற கணக்கில் தமது நேரத்தைக் கொடுத்தார்கள்.

## ஒரு பரிதாப உண்மைச் சீனக் கதை!

[பீக்கிங்]

நஞ்சுகலந்த உணவை ஒரு 4 வயது மகள் தந்தைக்கு கலந்து கொடுக்க அதனால் தாய் இறந்த சம்பவம் பீக்கிங்கில் நடந்துள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:- தந்தை தனது நான்கு வயது மகளின் குழப்படியைத் தாங்காமல் கண்டித்துள்ளார். இதைப் பொறுக்கமுடியாத அந்த மகள் தந்தையின் கஞ்சியில் எலிப்பாசாணத்தைக் கலந்துகொடுத்துள்ளாள்.

பின்னர் தன்னை பாடசாலைக்குக் கூட்டிவந்த தந்தையிடம், ''நான் உனக்கு நஞ்சு வைத்தேனே ஏன் இன்னும் நீ சாகவில்லை'' என்றுளாம். இதனைக் கேட்ட தந்தை பதைபதைத்து வீடுசென்று பார்த்தால், அங்கு அவ்வுணவை உண்ட அப்பிள்ளையின் தாய் [தனது மனைவி[ இறந்துவிட்டதைக் கண்டார். (செ)

## ● அந்தநாள் நினைவுகள் நெஞ்சிலே வந்ததே....

(நேற்றைய தொடர்ச்சி)

### ஒருவரும் கைதுசெய்யப்படவில்லை

சத்தியாக்கிரகம் தொடங்கி முதல்நாளே மூன்று மணித்தியாலங்களுக்குள் 100 பேருக்கு மேல் காயமடையக்கூடிய இந்தப் பொலிஸ் தாக்குதல் முன்னமே திட்டமிடப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரி தனது அறிக்கையில் ஒருவரும் கைதுசெய்யப்படவில்லை என்று கூறியது ஏன்? அவருடைய அறிக்கைப்படி தொண்டர்கள் சட்டத்தை மீறினார்கள் என்றும், மக்கள் கலவர நிலையை உண்டாக்கினார்கள் என்றும் தெரிகிறது இது உண்மையானால் தொண்டர்களிலும், மக்களிலும் சிலரையாவது கைதுசெய்திருக்கவேண்டும். இப்படிச் செய்யவில்லை. குண்டாந்தடிப் பிரயோகம் நடந்தது. கண்ணீர்ப்புகை உபயோகிக்கப்பட்டது. துப்பாக்கி வேட்டுத் தீரவேண்டியிருந்தது. ஆனால் ஒருவராவது கைதுசெய்யப்படவில்லை.

சட்டத்தை மீறுபவர்களையும், குற்றங்கள் செய்வோரையும் நீதிமன்றம் தண்டிப்பதா; அல்லது பொலிசாரே நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், உரிமைகளையும் சுவீகரித்துத் தாங்களே தண்டிப்பதா? தொண்டர்கள் சட்டங்களை எதிர்த்தார்கள் உண்மைதான்; ஆனால் அரசாங்க அதிபரையோ, பொலிஸ் அதிகாரியையோ, பலாத்காரத்தையோ உபயோகித்து எதிர்க்கவில்லை கச்சேரி வாசல்களைத் தடை செய்தார்கள்; ஆனால் பொலிசார் தங்களைக் கைதுசெய்வதைத் தடைசெய்யவில்லை.

## 25 ஆண்டுகளுக்கு முன்.. அந்த முதல் நாள்

தமிழரசுக் கட்சி ஆரம்பித்த இந்த சத்தியாக்கிரகத்தை முளையிலேயே கிள்ளி எறியவேண்டுமென்ற திட்டமொன்று முன்கூட்டியே தீட்டப்பட்டதென்பது தெளிவாகின்றது. அத்திட்டத்தின்படி சத்தியாக்கிரகிகளை அடித்து, நொருக்கி மித்துத் துவைத்தால் அவர்கள் பணிந்துவிடுவார்கள் எனக் கருதப்பட்டது. கொழும்பில் 1956-ம் ஆண்டு தமிழரசுக் கட்சித் தொண்டர்களால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகம் ஏவிவிடப்பட்ட குண்டர்களின் இவ்வித காடைத்தனமான நடவடிக்கையால் தொடங்கி ஒரு சில மணித்தியாலங்களின் பின் கைவிடப்பட்டதென்பதை அப்போது அங்கே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற பொலிஸ் படையினர் கண்டிருக்கிறார்கள். ஆகவே குண்டர்களும், காடையர்களும் அன்று கையாண்ட முறையையே இன்று இந்த பொலிசார் கையாண்டால் உடனுக்குடன் பலன் கிடைக்குமெனத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள்

### கச்சேரி வேலைகள் ஸ்தம்பிதம்

கண்மூடித்தனமான பொலிஸ் தாக்குதல் காரணமாகக் கச்சேரியில் கடமையாற்றும் சுமார் 300 குமாஸ்தாக்கள், பியோன்மார், நிர்வாக உத்தியோகஸ்தர்கள் ஆகிய சகலரும் 20-02 61 தொடக்கம் கடமைக்குச் செல்லவில்லை.

சனப்பிரதிநிதிகள் சபையில் சபை முதல்வர் சி பி. டி சில்வா 14-3-61ல் பேசியபோது; ''அரசாங்க ஊழியர் பலரும், அவர்கள் பிள்ளைகளும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுகின்றனர்'' எனக் கூறினர்

தமிழரசுத் தந்தை செல்வநாயகம் ஒரு அறிக்கையில் சத்தியாக்கிரகத்திற்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லையெனக் கூறியிருக்கின்றார்.

அத்தோடு யாழ்ப்பாண அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈடுபட்டார்கள் என்பதையும் அவர் வன்மையாக மறுத்திருந்தார்.

## மணிவாக்கு

சுதந்திரத்துக்கு வழிகாட்டிய ஒளி எங்களை இன்னும் ஒருமைப்பாட்டுக்கு இட்டுச் செல்லவில்லை. ஆனல் அந்த ஒளி இன்னும் சுடர்விட்டுக்கொண்டிருப்பதால் வெற்றி கிட்டும்.

—அரவிந்தர்.

# நமது நோக்கு

## யாழ்ப்பாணப் போர்

அரசாங்கம் அமந்தறைப்பட்ட, யாழ். பொது மக்கள் அஞ்சிய, யாழ்ப்பாணப் போர் பூரண வடிவம் எடுத்திருக்கிறது.

இதனை அறியாத. அல்லது அறிந்தும் அறியாதது போல் பேசும் அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, ''இன்று வடக்கிலும் கிழக்கிலும் சட்டம், ஒழுங்கு இல்லை'' என்றும், ''யாழ். கோட்டையிலுள்ள துருப்புக்கள் இன்று வெளியேற முடியாத நிலை காணப்படுகிறது'' என்றும் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறுர்.

வடக்கிலும் கிழக்கிலும் சட்டம், ஒழுங்கு மீண்டும் தோன்றுவதானல், அது ஒரு பொதுத் தேர்தல் மூலமே முடியுமென்று அவர் சொன்னதாகத் தெரியவில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள வளமுடைய விளை நிலங்களில்—பரந்தன், கிளிநொச்சி, வவனியா, கிழக்கில் நிலாவெளி, குச்சவெளி, பொத்துவில் போன்ற பொன் கொழிக்கும் இடங்களில் பாதுகாப்பற்று வாழ்ந்த விவசாயிகள் துண்டாக்கப்பட்டனர்.

இதனல் நாட்டுக்கு ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டுக்கு, ''மகாவலி இருக்கிறதே'' என்று துள்ளுகிறது இலங்கை டெயிலி நியூஸ் பத்திரிகை.

அது நிற்க, யாழ்ப்பாணத்தில் கோட்டையில் கொலுவிருக்கும் இராணுவத்தை அகற்ற வேண்டுமென்று யாழ். கச்சேரியிலும், குடாநாடு முழுவதிலும் சத்தியாக்கிரகப் போராட்டம் விஸ்தரிக்கப்படுகிறது

இதற்கு நேர்மாருக ஆயுதப் போர் யாழ். கோட்டை மைதானத்தில் ஆரம்பமாகி இன்று தெல்லிப்பழையில் நேருக்குநேர் சமராக உருவெடுத்திருக்கிறது.

தரையில் நடக்கும் போர் என்றாலும், ஆகாய விமானத் தாக்குதலும் அதற்குப் பக்கவாத்தியமாக அமைந்துள்ளது.

விமானப் போர், அதற்கு எவ்வித பாதுகாப்புமில்லாத பொதுமக்களை எந்நேரமும் அழித்துவிடலாம் என்ற அச்சம் பரவிவருகிறது.

தரையில் வீடு வீடாகச் சோதனை நடத்தும் இராணுவம், எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வாறிருக்கின்றன என்பதை எவரும் கற்பனை செய்துகொள்ளலாம்.

ஹெலிக்கொப்டரிலிருந்து மிகக் கோழைத்தனமாக மக்கள் மேல் சுடுவதைத் தமிழ்ப் போராளிகள் சும்மாவிடவில்லை; அதனைச் சுட்டுவிழுத்தும் சாமர்த்தியம் அவர்களுக்குண்டு. போராளிகளை ஒழிப்பது இராணுவத்தின் நோக்கம். இராணுவத்தை அகற்றுவது போராளிகளின் நோக்கம்.

நேரடிப் போரிலும் போராளிகளை முறியடிப்பது முயற்கொம்பு என்ற நம்பிக்கை அவர்களுக்குண்டு. ஆனல் பாதுகாப்பற்ற பொதுமக்களை எவ்வகையிலும் கொன்று குவிப்பதே வடக்கை அடக்கும் இராணுவ சூழ்ச்சியென்பது தெளிவாகிறது.

ஜெர்மன், ஜப்பானிய விமானங்கள், இரண்டாவது உலகமகா யுத்தத்தில் யாழ்ப்பாணத்தைக் தாக்கும் என்ற காரணத்தால் நிலத்தில் அகழிகள், வேறுவித பாதுகாப்பு இடங்கள்—கல் வீடுகள், தாழ் மறைப்புகள், திறந்த வீதியில் குப்புறப் படுத்தல்போன்ற ஏ-ஆர்-பி (ஆகாய விமானப் போர் பாதுகாப்பு) பயிற்சிகள் முன்கூட்டியே நடைபெற்றது நினைவுக்கு வருகிறது.

இன்று இங்கு நிலவும் போர்முனையில் சிவிலியன்ஸ் உயிர் தப்பக்கூடியதாக இருந்தும், இவ்விதபாதுகாப்பு முறைகள் தெரியாத வகையில் இராணுவத்தின் குண்டுகளுக்கு இரையாகின்றனர். இதனை இங்கு வாழ்பவர்கள் பார்வையாளராகப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது.

தாய்மார் சத்தியாக்கிரகம், மக்கள் ஆயுதப்போர் என்பது பார்வைக்கு ஒரு முரண்பாடு; உண்மையில் இளைஞர் காட்டும் வீரத்துக்கு மேலானதே சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நம்பிக்கைகொண்ட மக்களின் தியாகம்.

அரசாங்கம் இதனைப் 'பயங்கரவாத ஒழிப்பு' என்று பூசிமெழுகுவது, எவரையும் ஏமாற்றமுடியாத தந்திரம். எதிர்க்கட்சிகள் இதனைத்தடுக்க முயலாது எவ்வாறு திசைதிருப்பலாம் என்று நினைக்கின்றன.

சிங்களமக்களின் தலைமைத்துவம் யாருக்கு என்பது-வல்லரசுகள் போல் இரண்டாக அல்ல மூன்ருய், நான்காயும் விஸ்தரிக்கப்படலாம். அவற்றில் எதுவும் வடக்கையும் கிழக்கையும் ஒரு ஒற்றையாட்சி என்ற குடையில் ஆளும் உரிமைக்கு உரித்தாகமாட்டாது என்பது திண்ணம்.

போரின் முடிவு திட்டவட்டமாக இருக்குமென்ருே, அல்லது தமிழர் வாழும் இருப்பிடங்கள் பாலைவனமாக்கப்படுமென்ருே நாம் திடம் கூற முடியாது.

போராளிகளோ சத்தியாக்கிரகிகளோ பயந்து பின்வாங்கிவிட்டால், இன்று ஆட்சியிலிருக்கும் அரசு இலங்கைவாழ் தமிழ் மக்களை இலகுவில் விட்டு வைக்காது. அதேசமயம் அரசுக்கு பூரண வெற்றி வருவதை ஏனையகட்சிகள் ஒருபோதும் அனுமதிக்கா.

இராணுவ - சிவிலியன் போர் என்று இதனைக் குறிப்பிடுவது தவருகாது.

மக்கள் தற்காப்பு பேணவும் உணவு, குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது முன்ஆயத்தம் பற்றி மக்கள்குழு மிக நுட்பமாகச் செயலாற்ற வேண்டும்.

போராட்டம்-எதுவாயிருந்தாலும் மக்கள் அனைவரும் பங்குகொள்ளவேண்டியது கட்மையாய்விட்டது. ஆயுதங்கள், ஆட்கள் என்ற சந்தேகம் பேசும் காலம் மலையேறிவிட்டது.

தலைவர்கள் யார்? நாமனைவருமே! ருேயல், சென். தோமஸ். அல்லது ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் படிப்பு மக்கள் போருக்கு அவசியமில்லை; ஆபத்துங்கூட.

சாதாரண கிராம பாடசாலைகளிலிருந்து வெளியேறியவர்கள் தாராளமாய்ப் போதும்.

யாழ். மாநகரசபை அலுவலக இடமாற்றம்

# இடமாற்றம் அவசியம் ஆனல் நல்லூர் பொருத்தமா

யாழ்ப்பாண மாநகரம் பல்வேறு அம்சங்களிலும் ஒரு நெருக்கடி மிகுந்த நகரமாகி வருகிறது. நகரின் ஒடுக்கமான தெருக்கள் போக்குவரத்து மற்றும் நடவடிக்கைகளுக்குப் போதாமலுள்ளன. முக்கியமான பல வீதிகளைஅகலமாக்குவதிலும் பல பிரச்னைகள் உள்ளன. இந்நிலையில் நகரின் சில நடவடிக்கைகளை நகர மத்தியிலிருந்து வேறிடங்களுக்கு மாற்றுவதன் மூலம் நகரில் அதிகரித்துவரும் நெருக்கடியைக் குறைக்கலாம். இத்தகைய ஒருநோக்கில் மாநகர சபைச் செயலகத்தின் இடத்தை மாற்றுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும். இடமாற்ற முடிவுக்கு பல்வேறு சர்ச்சைக்கு உரிய காரணங்கள் காட்டப்பட்டாலும், இதனுல் ஏற்படக்கூடிய நீண்டகாலப் பயன்களைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும.

ஆனலும் இவ்வாருன ஒரு மாற்றம் மிகவும் கவனமாகச் செய்யப்படவேண்டும். மாநகர சபைக் காரியாலயத்தை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதென்பது மேலோட்டமாகப் பார்க்கும்போது தெரிவதுபோல ஒரு இலகுவான காரியமல்ல. புதிய இடம் நகரின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களுடன் ஒத்துப் போகக்கூடியதாக இருக்க வேண்டும். இந்தஇடம் நகர விஸ்தரிப்பு இடம்பெறக்கூடிய பகுதிகளுக்கும் வசதியான ஒரு இடமாக இருத்தல் அவசியம். புதிய அலுவலகம் அமையவுள்ள இடத்துக்குப் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும். இவ்வாறு போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கும்போது, புதிய காரியாலயத்தை அண்டியுள்ள பகுதிகள் துரிதமான வளர்ச்சியடையக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

## வரவேற்கக்கூடியது

யாழ்ப்பாணத்தில் பழைமைத் தமிழன் சங்கிலியன் மன்னனுக ஆள்கின்றபோது அமைத்த இராசதானியில் யாழ். மாநகராட்சி மன்றம் இயற்றப்படுதல் சிறப்பான வரவேற்கக்கூடிய திட்டமொன்றே. இன்றைய சூழ்நிலையில் மக்கள் கோட்டையையும் அதன்சூழ் பிரதேசங்களையும் புறக்கணிப்பதுடன் இடம்பெயர்வதும் கண்கூடாகக் காணக்கூடிய காட்சியாகும். இந்நிலையில் பழைய மாநகர சபைக் கட்டிடத்திற்கு மக்கள் செல்லவே அஞ்சுவர் என்பது மிகத்தெளிவு. மாநகர சபைக் கட்டிடம் முதற்கொண்டு நூல் நிலையம் முதலியவை அழிக்கப்பட்டுள்ளன. இன்று யாழ். மக்கள் பெருமை கூறிட எவ்விதமான கட்டிடங்களும் இல்லை என்பதனை யாவரும் மனதில் நிறுத்திடவேண்டும்.

இன்று இயற்றப்பட்ட திட்டத்தை முழுக்கவனத்துடன் நோக்கின் இவ்வமைப்பு திருத்தமானதும் நகர அலுவல்களைச் சீராக ஒரே கட்டிடத்தினுள் இயற்றமுடியும் என்பதும் நிச்சயம். இன்றுள்ள நிலையில் மாநகர அலுவல்கள் ஒவ்வொரு இடமாக எடுத்துச் செல்லப்பட்டு கவனிக்கப்படுதல் எம் கண்கொண்டு காணக்கூடியதாய் இருக்கின்றது. இதனுல் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதுடன் காலதாமதத்தையும் ஏற்படுத்துகின்றது. நிந்நிலை தொடராமல் இருக்க இத்திட்டம் வசதியுடையதே.

கட்டிடம் அமையும் இடத்தில் பாதுகாப்பை இன்றைய நிலையில் நோக்கின் உயர் பெறுமானத்தில் இத்திட்டத்தின் மூலம் பெறமுடியாவிடினும் அதிகப்படியான பாதுகாப்பைப் பெறமுடியும் என்பது நிச்சயம்.

சகல வசதிகளுடனும் கூடிய மாநகராட்சி மன்றம் எமது பழைய இராசதானிக்கே மாற்றப்படுதல் வரவேற்கத்தக்கதே. ''மீண்டும்இராசதானி'' உருவாக்கப்படுதல்மூலம் எமது பாரம்பரியம், பழைமை என்பவற்றை நிலைநிறுத்த முடியும் என்பது உண்மையே.

தி ஞானேஸ்வரன்.
யாழ். இந்துக் கல்லூரி.

## சர்ச்சை முற்றும்

யாழ் மாநகரசபை அலுவலகம் இடமாற்றம் தொடர்பான 'சர்ச்சை' 'ஈழநாடு' வில் இன்றுடன் முற்றுப்பெறும்.

காணிவிலை அதிகரிப்பு, குடியிருப்புப் பகுதிகளில் நெருக்கம் அதிகரித்தல், வர்த்தக நடவடிக்கைகளின் அதிகரிப்பு போன்ற விளைவுகள் ஏற்படும்.

ஆகவே அலுவலகத்துக்காகத் தெரிவுசெய்யப்படும் இடம இவ்வாருன யாற்றங்களை உள்வாங்கி விரும்பத்தக்க வகையிலான வளர்ச்சியடையக்கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.

## மக்கள் கருத்து

மேற்கூறிய அடிப்படையில் நோக்கும்போது புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நல்லூரின் பொருத்தப்பற்றிச் சில சந்தேகங்கள் எழுகின்றன நல்லூர் பழைய யாழ்ப்பாண அரசின் தலைநகரமாக இருந்தகால் மாநகரசபை அலுவலகத்தை அங்கே அமைப்பது மிகவும் பொருத்தமானது என வாதிடப்படுகின்றது. ஆனல் இதே காரணம் நல்லூரில் புதிய காரியாலயம் அமைப்பதற்கு எதிராக உள்ளது கவனிக்கப்படவேண்டும்

நல்லூரின் பழமையை வெளிக்கொணரும் விதத்தில் புதைபொருள் ஆய்வுகள் போதிய அளவு நடத்தப்படவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும், புதிய அலுவலகத்துக்கான காணி இத்தகைய ஆய்வுகள் நடத்தப்பட வேண்டிய இடங்களுக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ளது, எனவே அலுவலகத்தை அண்டிப் புதிதாக ஏற்படக்கூடிய வளர்ச்சி எதிர்கால ஆய்வுகளுக்கு முட்டுக்கட்டையாக அமையக்கூடும்.

புதிய இடம் மாநகரசபைப் பகுதியின் மத்தியில் அமைந்துள்ளதாகவும், நகர எல்லைப் பகுதிகள் பலவற்றிலிருந்து புதிய அலுவலகத்தின் தூரம், பழைய அலுவலகத்தின் தூரத்திலும் குறைவு எனவும் வாதிடப்படுகிறது. இதனை விளக்க தூரங்கள் குறிக்கப்பட்ட நகரத்தின் வரைபடமொன்

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி இறுப்பாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டதா?

மாநகர சபையின் புதிய கட்டிடத்திற்கு தை மாதத்தில் அத்திவாரம் போடப் போவதாக ஆணையாளர் அறிவித்துள்ளார். எந்தக் காணியில் அந்தக் கட்டிடம் வரப் போகிறதென்ருே அதற்குப் பணம் எங்கிருந்து வரப்போகிறது என்ருே தெளிவாக அறிவிக்கவில்லை.

மாநகரசபை இயங்காமல் இருக்கும் பொழுது இப்படி ஒரு பாரிய கட்டிடம் கட்டுவதற்கு ஆணையாளருக்கு அதிகாரம் கொடுத்தது யார்? இதைச் செய்ய முன் யாருடன் இதைக் கலந்தாலோசித்தார். மாநகரசபைக் கட்டிடங்களும் சொத்துக்களும் வரி இறுப்பாளருக்குச் சொந்தமானதென்பதை யாரும் அறிவர் யாவரும் அறிவர். அவர்களை இவர் கலந்து ஆலோசித்தாரா?

நல்லூர் கந்தசுவாமிகோவில் ஒரு பொது இந்து மத தர்ம நம்பிக்கைச் சொத்து, அதைப் பரிபாலிப்பதற்குத் தான் இப்போதுள்ள மனேஜரும் அவர் சந்ததியினரும் சில நிபந்தனைகளுக்கமைய நியமிக்கப்பட்டுள்ளார்கள். அதன் பிரகாரம் இந்தக் கோயில்க்காணியை விற்கவோ, அல்லது நீண்டகால குத்தகைக்குக் கொடுக்க கோட்டின் அனுமதியின்றி செய்ய முடியாது. இதனுல் வரும் இடைஞ்சல்களுக்கும் நட்டத்திற்கும் யார் பொறுப்பு. இவ்விடம் சனம்நெருங்கி வாழும் இடத்திலுள்ளது.

நிதியைப் பற்றி யோசிப்போம். இப்போ மாநகரசபையிடம் இருக்கும் நிதியிலிருந்து ஒரு பாரிய கட்டிடம் கட்ட முடியாது. அப்படியானல் மீதப்பணம் யார் கொடுப்பதுஎன்றெல்லாம் ஆணையாளர் தன் அறிக்கையில் சொல்லத் தவறிவிட்டார்.

இப்போது மாநகரசபைக்குச் சொந்தமாயுள்ள திறந்த வெளி அரங்கு, விளையாட்டு அரங்கு, நூல்நிலையம் பூங்கா, போன்ற இடங்களுக்கும் பதில் இடங்களை அமைக்கப்போவதாக ஆணையாளர் தன் அறிக்கையில் கூறியிருக்கிறுர். அப்படியாயின் அந்தக் கட்டிடங்களுக்கும் இடங்களுக்கும் என்ன கதி நேரப்போகிறது?

சு. செ. மகாதேவா
(முன்னுள் மாநகர முதல்வரும், யாழ்ப்பாண வரியிறுப்பாளர் சங்கத் தலைவரும்.)

# 30 தார் பீப்பாக்களை ஒப்படைக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

'ஊர்காவற்றுறைப் பகுதி, வீதித் திருத்தவேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட முப்பது பீப்பா தார், யாழ், புகையிரத நிலையத்திலிருந்து ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளர் [வீதி அபிவிருத்தி அதிகாரசபை] அலுவலகத்துக்கு எடுத்துச் செல்வதற்காக லொறியில் ஏற்றியபோது இனந்தெரியாவர்களால் கடத்தப்பட்டன.

இக்கடத்தல் சம்பவத்தினால் ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பலபிரதான வீதிகள் உடன் திருத்துவதற்கு தரப்பட்ட அனுமதியும், ஒதுக்கிடப்பட்ட பணமும் உடனடியாக மேலிடத்தால் வாபஸ் பெறப்படலாம் என்று அஞ்சப் படுகிறது.

'யாழ்ப்பாண வீதி திருத்த வேலைகளுக்காக தார்ப் பீப்பாக்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதில் பெரும் சிரமம் ஏற்படலாம். அதே நேரத்தில் இன்று யாழ்ப்பாண வீதிகள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருப்பது அனைவரும் அறிந்ததே. அண்மையில் ஒருதமிழ் தினசரி ஒன்றில் ['ஈழநாடு அல்ல] வடபகுதி வீதிதிருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை. எனவே பெரும் சிரமத்தின் மத்தியிலும் கொண்டுவரப்பட்ட 30 தார்ப் பீப்பாக்களையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் திருப்பித் தந்து வீதிவேலைகளைச் செய்ய உதவுமாறு வேண்டுகின்றோம்' ஊர்காவற்றுறை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அஞ்சல் தொலைத் தொடர்பு இளைப்பாறிய உத்தியோகத்தர் சங்க அங்கத்தவரார்ப்பணக் கூட்டம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் பெப்ரவரி 3 ம் திகதி நடைபெறும் என்று அதன் அமைப்புச் செயலாளர் இ. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றம்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதிலே குறிக்கப்பட்டுள்ள தூரங்கள் இடங்களுக்கிடையேயான நேர்கோட்டு வழியேயான தூரங்களாகும். தெருக்கள்வழியே அளக்கப்பட்டால் தூரங்கள் அதிகரிக்கும் சாத்தியம் உண்டு. உண்மையில் தூரங்களைவிடப் போக்குவரத்து வசதிகளே முக்கியமாகும். பழைய அலுவலகம் நகரை நோக்கிவரும் பிரதான பாதைகளின் சந்திப்புக்கு அண்மையில் இருந்தது. இதனால் நகரின் பல பகுதிகளிலிருந்தும் போக்குவரத்துச் செய்வது இலகுவாக இருந்தது, புதிய இடத்துக்கு இவ்வாறான சிறப்பான வசதி அமைதல் கடினமே.

மாநகரசைபஅலுவலகத்தை இடம் மாற்றும் விடயத்தில் பல்வேறுபட்ட அம்சங்கள் கவனத்திற்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவு எனவே முடிவுகள் எடுக்கப்படும் போது நகர வளர்ச்சியில் உண்மையான அக்கறையுள்ள நிபுணர்களையும், அறிஞர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டியது மிகவும் அவசியம் அத்துடன் அண்மையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்திய நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட, யாழ்ப்பாண நகர அபிவிருத்தித் திட்டம் உள்ளது. இதுவும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்

இ. மயூரநாதன்
-கட்டிடக் கலைஞர்-


**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30
சிவாஜி—பிரபு
**சாதனை**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-லட்சுமி
ஸ்ரீபிரியா-தேங்காய்
மனோரமா
**அவன்-அவள்-அது**
(புதிய பிரதி கலர்)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**
[புதிய பிரதி]



**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையறுள்ளது)

**வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்**

எமது சங்கத்தில் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்குண்டு.

கேள்விவிண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் முடிவுத் திகதி 29-01-1986.

பொதுமுகாமையாளர்,
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
24-01-1986. (A 141)



**நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்**

நீர்பாசனக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 1986ஆம் ஆண்டுக்கு ஏக்கரொன்றுக்கு பின்வரும் நீர்ப்பாசனக் கட்டணங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ள திட்டங்களின் குளக் குறியீட்டேட்டிலுள்ள காணிகளுக்கு விதிக்கப்படுகின்றது.

காலபோகமும் சிறுபோகமும் ஆகிய இரண்டும் செய்கை பண்ணப்படும் காணிகளுக்கு ரூபா 120/-

ஏதாவதொரு போகம் மாத்திரம் செய்கை பண்ணப்படும் காணிகளுக்கு ரூபா 75/-

**திட்டங்களின் பெயர்கள்:-**

1. இரணைமடுக்குளம்
2. அக்கராயன்குளம்
3. கல்மடுக்குளம்
4. வன்னேரிக்குளம்
5. கரியாலை நாகபடுவான் குளம்
6. புதுமுறிப்புக்குளம்
7. கனகாம்பிகைக்குளம்
8. பிரமந்தலாறுக்குளம்

என். ஜெயநாதன்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.
கச்சேரி,
கிளிநொச்சி. C 137


# அமெரிக்க ஈழ சங்கத்துக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### ஏப்ரலில் பேச்சுவார்த்தை

இஸ்ரேலிய அரசின் ஆலோசகர் ஒருவர் இவர்களைத் தூதரகத்தில் வரவேற்றார். இச்சந்திப்பில் இலங்கைத்தமிழர் பிரச்னை பற்றி விரிவாக விளக்கப்பட்டதோடு இஸ்ரேலிய அரசாங்கத்துடன் மேலதிக பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க ஈழ சங்கத்தினரும், டாக்டர் சுப்பிரமணிய சுவாமியும் இஸ்ரேலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் இப்பேச்சுவார்த்தை ஏப்ரல் மாதம் இடம் பெறும்.

இதேவேளையில் ஈழசங்கத்தின் பிரதிநிதிகள் இலங்கையின் மனித உரிமைகள் சம்பந்தமான நிலைபற்றிய விவரங்களை அறிக்கையாக இந்த மாத ஆரம்பத்தில் ராஜாங்க அமைச்சின் மனிதஉரிமைகளுக்கான உதவிச் செயலாளர் திரு. ஆர். சிப்டரிடம் கையளித்தனர்.

தமிழர்கள் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வரையில் எல்லாவற்றையும் இழந்த நிலையில் துன்பப்படுகின்றனர் என்று அவ்வறிக்கை சமர்ப்பிக்கும்போது அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### அறிக்கை தயாரிப்பு

மனித உரிமை சம்பந்தமான நிலை பற்றிய வருடாந்த அறிக்கை ஒன்றை தயாரிக்கும் வேலையிலும் தற்போது இவர்கள் ஈடுபட்டுள்ளனர்

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இது பற்றி கருத்து வெளியிடுகையில்; இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரேயொரு வழி அரசியல் தீர்வே என்று தெரிவித்துள்ளார்.

### பலியானோருக்கு அஞ்சலி

இதே நேரத்தில் கடந்தவருடம் இராணுவ நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட இலங்கைத்தமிழர்களின் ஞாபகார்த்தமாக முக்கியமான வைபவமொன்றும் வாஷிங்டன் டல்ரிமோர் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களைச் சேர்ந்த மதத்தலைவர்களும் தமிழர்களும் அங்கு உரையாற்றினர்கள். கொல்லப்பட்டவர்களுக்காக அஞ்சலி பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

### ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில்

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஆராய்வதற்கான முழுநாள் கருத்தரங்கொன்று ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் மார்ச்மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ளது

இக்கருத்தரங்கில் அமெரிக்க ஈழசங்கத்தின் பிரதிநிதிகளும், அமெரிக்க, இஸ்ரேல் ராஜதந்திரிகளும்கலந்துகொள்ளவிருக்கின்றனர். இதில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. ச-ய)

## சிறிமாவோ--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார்,

பெல்மதுளையில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் அங்கு கூறியதாவது:

''இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கு குடியுரிமை வழங்கியதனால் நுவரெலியா, பண்டாரவளை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய இடங்களிலிருந்து தமிழ் எம். பிக்களே பாராளுமன்றத்திற்கு வருவர்.

''இன்று நாம் வடபகுதியிருந்து தாக்கப்படுகிறோம். மலைநாட்டுப் பிரதேசத்தில் இருந்தும் நாம் தாக்கப்டுவோமேயானால் சிங்கள மக்கள் கடலில் விழுவதைத் தவிர வேறுவழியில்லை'' என்று கூறினார் (ய-செ

## சன சமூக நிலைய கட்டட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு பாரதி சன சமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வீ கே. சிவஞானம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்வைபவத்தில், யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் திருவாளர்கள் எஸ். சிவலிங்கராசா, கனகசபாபதி நாகேஸ்வரன்,அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் உட்பட பலர் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்கள். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன, [ச]

## இன்றும்நாளை--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னையர் முன்னணி தெரிவித்தது.

இதேபோன்று ஞாயிற்றுக்கிழமையும் மறியல் நடைபெறமாட்டாது,

திங்கட்கிழமை முதல் மீண்டும் மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அன்னையர் முன்னணியினர் தெரிவித்தனர். (ஐ)


**நன்றி நவிலல்**

இம்மாதம் 9ம் திகதி அதிகாலை கடத்திச்செல்லப்பட்ட சித்தங்கேணியைச் சேர்ந்த யாழ் இலங்கை வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர் திரு. மருதமுத்து மகேசன் 23-01-86இல் நிபந்தனை எதுவுமின்றி நன்றாக உபசரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

A-377 மகேசன் குடும்பத்தினர்,



**இன்று மங்களகரமான திறப்புவிழா**

வீடியோ படப்பிடிப்பிற்கும் T. V. டெக்குகளுக்கும் திரைப்படப் பிரதிகளைத் தெரிவு செய்துகொள்ளவும். ஓடியோ வீடியோ ஒளிப்பதிவுகளுக்கும்,

**ரேவதி வீடியோஸ்**
பிரதான வீதி, இளவாலை.

25-01-1986 (சனி) காலை 9-00மணியளவில் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்கள்:
V. T. சிவராஜா, and V. T. சற்குணராஜா. C 372


## உலக நாடு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவினர் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்திய கூட்டத்தில் பேசும்போது பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

அவர்அங்கு தொடர்ந்துபேசுகையில் யாழ் கோட்டையில் இராணுவம் இருப்பதால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தினால் பாதிக்கப்படுகிற யாழ். நகரத்திலுள்ள பாடசாலை, வர்த்தக நிலையங்கள் அலுவலகங்கள், ஆஸ்பத்திரி தபால் கந்தோர் போன்றசகல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளினதும் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டது. என்றார்.

யாழ். பிரஜைகள் குழு உபதலைவர் எஸ் பி. அருமைநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியன் தமது உரையில் ஆஸ்பத்திரிவளவுள் குண்டுகள் வந்து வீழ்கின்றன சாதாரண நாட்களிலேயே நிலைமை இப்படி இருக்கையில்கனரகதுண்டுகள்பாவிக்கப்பட்டால்நிலைமை எப்படி இருக்கும். நோயாளரை வைத்திய சாலையில் வைத்திருக்க முடியாதநிலைமை நிலவுகிறது என்றார்.

யாழ். மாநகரசு ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் பேசுகையில் ''ஆயிரம் மீற்றர் பிரகடனத்துக்கு முன்பும், பின்பும், நிலைமை ஒன்றுதான் தீவிரவாதிகள் - அரசு சண்டையின்போது மக்களை காப்பாற்றுவது யார்? இம் மக்களைக் காப்பாற்றுவீர்களா?இல்லையா? என அரசாங்கத்தைத் தட்டிக்கேட்போம் என்றார்.

14 ஸ்தாபனங்களைப் பிரதித்துவப்படுத்திய சுமார் அறுபதுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இக்கூட்டத்துக்கு சமூகம் கொடுத்திருந்தனர்.

## நாவற்குழி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து பதற்றமடைந்த அரியாலை, நாவற்குழி சந்தி, நாயன்மார்கட்டுப்பகுதி மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர்.

பீரங்கி வெடிச்சத்தமும், இடையிடையே துப்பாக்கி வெடிச்சத்தங்களும் தொடர்ந்து கேட்டவண்ணமிருந்தன.

சுமார் இரவு 8-30 மணிக்குப் பின்னர் ஹெலிகொப்டர் அவ்விடத்துக்கு வந்து அரியாலை, தொடக்கம் நாவற்குழி வரையுள்ள பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம்செய்து கொண்டிருந்தது இடையியிடையே குண்டுவீச்சும் இடம் பெற்றது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இச்சம்பவங்களால் ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை (மா)

## வசாவிளானில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றார். இறந்த இளைஞரின் சடலம் நேற்று நண்பகல் வரை அவ்விடத்திலேயே கிடந்ததாம். ஒரு மணியளவில் ஒரு வீடொன்றுக்குள் இறந்த இளைஞரின் சடலத்தைப் போட்டு தீ வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மற்றகாயமடைந்த இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (மா)

## வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'இன்ரசிற்றி' ரயில்சேவை திங்கள், புதன், வெள்ளிஆகிய நாட்களிலும் 'யாழ்தேவி' செவ்வாய், வியாழன், சனி, ஆகிய நாட்களிலும் சேவையிலீடுபடவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ச

# ,தொண்டமான் இலங்கையின் முடிசூடா மன்னன்!' அநுரா கூறுகிறார்

(கொழும்பு)

''கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மத்திய மாகாணத்தின் முடிசூடா மன்னனாக இருக்கின்றார். ஒரு வகையில் அவர் இலங்கையின் முடிசூடா மன்னனாகவும் இருகின்றார்.'' என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

''வடக்கும் கிழக்கும் இணைவதற்கு அமைச்சர் தொண்டமான ஆதரவாக செயல்படுகின்றார் என்பதினை ஆங்கிலப் பத்திரிகையொன்றின் மூலம் அறிந்தேன் உண்மையில் அவர் வடக்கும் கிழக்கும் இணைவதற்கு ஆதரவு தெரிவிக்காதவராயின் இம மாதம் 31ம் திகதி பாராளுமன்றத்தில வந்து கூறட்டும் தமது கோரிக்கையை பிரார்த்தனை மூலம் வென்றெடுக்கும் அவர் வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் என்று ஏன் பிரார்த்தனை நடத்தக்கூடாது அப்படி அவர் பிரார்த்தனை நடத்தினல் அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளத்தாமனவேண்டும். வடக்கு கிழக்குப் பகுதியில் இராணுவத்தினர் கற்பழிப்பு போன்ற செயல்களில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது அப்படியானல் அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை 1971 ம்ஆண்டு இத்தகைய செயல்கள் இடம்பெற்றபோது நாம் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தோம்'' என்று திரு. அநுரா பண்டாரநாயக்கா கூறினர்.

# வியாபாரத்தை நடத்துமாறு பரு. வர்த்தகர்களுக்கு சங்கம் கோரிக்கை

[புலோலி]

பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் உடனடியாக வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக பருத்தித்துறை வர்த்தகர்களுக்கு 'ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினல் விடுக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

''வியாபார நிலையங்களிலிருந்து சில வர்த்தகர்கள் பொருட்களை அகற்றிச் சென்றுள்ளதை நாங்கள் அறிவோம். நீங்கள் உடனடியாக கடைகளைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்காவிட்டால், வாடகைக்குக் குடியிருந்து வியாபாரம் செய்ய உங்களுடைய வெறுமையான கடைகளில் நாங்கள் எச்சூழ்நிலையிலும் வியாபாரத்தைத் தொடர்ந்து செய்யக்கூடிய வியாபாரிகளைஅமர்த்துவோம். இந்தக் கடுமையான முடிவுக்கு எம்மைத் தள்ளியதற்கு நீங்களே காரணமாவீர்கள்''

# ''சுப்பிரமணிய சுவாமியை எதிர்கொள்ளத் தயார்!

## அகலவத்தை எம்.பி. கூறுகிறார்!

[கொழும்பு]

''இந்தியாவிலுள்ள லோக்தள் கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி என்பவர் 10,000 பேருடன் இலங்கை மீது ஆக்கிரமிப்பு செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார். அவ்வாறு அவர் படையுடன் வரும்பட்சத்தில் அவரை எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம்'' என்று அகலவத்தை தொகுதி எம். பி. திரு. மெரில் காரியவாசம் பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

''சுப்பிரமணிய சுவாமி படையுடன் இங்கு வந்தால் அவரை வரவேற்பதற்காக நாம் களனி எம்.பி,யை [சிறில் மைத்தியூ] அங்கு அனுப்புவோம். சுப்பிரமணிய சுவாமி ஒரு 'ஜோக்கர்' அவரின் கூற்றை நாம் பொறுக்கமுடியாது. எமது சிங்கள வீரத்தை அவருக்கு நாம் காட்டுவோம்'' என்றார்.

# மறியல் போராட்டத்தில் அதிகமான பெண்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டை இராணுவ முகாமை அகற்றக்கோரி யாழ். செயலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்டுவரும் மறியல் போராட்டத்தில் நேற்று ஏராளமான பெண்கள் பங்குபற்றினர்.

தொழிற்சங்க கூட்டுக்குழு இம் மறியல் போராட்டம் தொடர்பாக எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தை சார்ந்த யாழ். மாநரசபை சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்றைய மறியல் போராட்டத்தில் பெருமளவில் பங்குபற்றினர்கள். [ஐ]

# கூட்டிச் செல்லப்பட்டவர் இறந்துகிடந்தார்

(ஐ சண்முகலிங்கம்)

பலாலி இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இரு இளைஞர்களில் ஒருவர் பலாலிமுகாமருகே உள்ள பற்றையில் இறந்து காணப்பட்டார் மற்றொருவர் தலையில் காயங்களுடன் காணப்பட்டதால் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அவசர சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

வயாவிளானில் நேற்று நிகழ்ந்த இச் சம்பவத்தில் இறந்தவர் சுப்பிரமணியம் பொடிசிங்கம் [30] என்பவராவார். காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர் உ. மகாதேவன் (21) என்பவராவர்.

வயாவிளான், கட்டுவன், வறுத்தலைவிளான், தெல்லிப்பழை ஆகிய இடங்களில் இராணுவத்தினரின் பீரங்கி, மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்கு உள்ளானவர்களில் மூன்று பெண்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் மயிலணி மேற்கைச் சேர்ந்த செந்தில்குமாரி (24, மரணமானர் செல்லம்மா, பிரேமாவதி, ஞானதேவி (28) ஆகியோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் தத்தமது வீட்டு வளவினுள் நின்றபோது பீரங்கியினல் ஏவப்பட்ட குண்டுகள் பட்டதால் தலை, மார்பு ஆகிய இடங்களில் காயம் அடைந்துள்ளனர்

புங்குடுதீவுசுந்தரலிங்கம்[26] அசோக்குமார்(11), திருநெல்வேலி தெடக்கு எஸ். வேலாயுதம் [30], டெனு [24], வாரத்துப்பிள்ளை அல்பிரட் (48), சுன்னுகம் வீ விஜயகுமார்(25) சட்டுவன் கௌரிபாலன், வசாவிளான் உ. மகாதேவன், ஆகிய எட்டுப் பேரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு பேர் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் (ஐ)

# கல்வித் திணைக்களம் முன் தொடர்ந்து மறியல்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டை இராணுவத்தை வெளியேற்றக்கோரி அன்னையர் முன்னணியினரால் யாழ். கச்சேரி முன்பாக நடைபெற்றுவரும் மறியல் போராட்டத்திற்கு ஆதரவாக, யாழ் கல்வித்திணைக்களத்துக்கு முன்பாக செய்யப்பட்டுவரும் மறியல் போராட்டம் நேற்று 2ம் நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

யாழ். சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்படும் இம் மறியல் போராட்டத்தில் இக் கழகத்தின் அகதிகள் முகாமிலுள்ள திருமலையைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் பங்குபற்றினர்கள்.

கல்வித்திணைக்களம் அமைந்துள்ள காணியில் இருக்கும் நல்லூர் சாதனு பாடசாலை நேற்று நடைபெற்றது.

மறியல் போராட்டக்காரர்கள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளே செல்ல அனுமதித்தனர். இவ்விடத்திலுள்ள செம்மணி வீதி பாதை மறிக்கப்பட்டு போக்குவரதது நேற்றும் நடைபெறவில்லை, (ஐ]

# ரூபவாஹினி

ஜனவரி 25 சனிக்கிழமை

மாலை

5-00 செய்திகள்
5-05 உள்ளூர் உதைபந்தாட்டம்
5-30 'சவனக் ரஸ்' சிறுவர் நிகழ்ச்சி
6-00 பௌத்தஉரை (தமிழ்)
6-15 பௌத்த உரை (சிங்களம்)
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 'பிளனட் ஒவ் த ஏப்ஸ்'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 'யசோரவய' டெலி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 அனுசாசன
10-00 'டௌத்த உரை' (ஆங்கிலம்)
10-15 'கரணிய மெட்ட சுட்ட.'
10-25 ஒளிபரப்பு முடிவு.

# பூநகரி முகாம் வீதியில் தடை

(பூநகரி)

பூநகரியில் அமைந்துள்ள இரு ராணுவ முகாம்களின் முன்பாகவும் அமைந்துள்ள பிரதான வீதிகளில், மாலை ஆறுமணியிலிருந்து காலை ஆறு மணிவரையும் போக்குவரத்து செய்ய தடை செய்யப்பட்டுள்ளது-

# விளக்கப் படங்களுடன் இன்று கருத்தரங்கு

(புலோலி)

''நோய்களும் அவற்றைத் தடுக்கும் வழி வகைகளும்'' என்ற தலைப்பில் புகைப்படங்கள் அட்டவணைகள் மாதிரிகள் ஆகியவற்றின் விளக்கப் படங்களுடன் கூடிய கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை புலோலி கம நலச் சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் சங்கத்தினல் நடாத்தப்படும் இக் கருத்தரங்கில் மனிதனும் நீரிழிவு நோயும்' பற்றி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜாவும் 'பசுக்களுக்கும் எருதுகளுக்கும் ஏற்படும் நோய்கள் பற்றி கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். சுப்பிரமணியமும், கோழிகளுக்கு வரும் நோய்கள் பற்றி அச்சுவேலி அரச கால்நடைப் பண்ணை முகாமையாளர் டாக்டர் திருமதி ரி. தங்கராஜ வும் கருத்துக்களை வழங்குவார்கள்.

# சம்பளம் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் ஊழியர்களினதும், இப் பிரிவு கிராம சேவை அலுவலர்களினதும் இம் மாதச் சம்பளம் நேற்று வரை கிடைக்கவில்லை. இதனல் இந்த ஊழியர்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

# வைத்தியசாலையில் ஏற்பட்ட பதற்றம்

[பண்டத்தரிப்பு]

தெல்லிப்பழைப் பகுதியில் ஆயுதப்படையினால் மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்களின் போது தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஊழியர்களும் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தப்பட்டனர்.

வைத்தியசாலைக்குள் பிரவேசித்த இராணுவத்தினர் வைத்தியசாலையின் சகலஅறைகளையும், வார்ட்டுக்களையும் பார்வையிட்டு தீவிரவாதிகள் ஒளித்து இருக்கிறார்களா என்று நோட்டம் விட்டதாகவும், அங்கிருந்த ஊழியர் ஒருவரை பயமுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனல் வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் பலத்த அச்சம் நிலவியது.

# சிறுவர்பூங்கா, நூலகம், அரங்கு, நகரமண்டபம் இடம் மாறுது

## ஆணையாளர் தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

''யாழ் மாநகராட்சி மன்றத்தின் புதிய செயலக கட்டிட அமைப்பைப் பார்வையிட்டவர்கள் சிறுவர் பூங்கா, நூலகம், திறந்தவெளியரங்கு ஆகியவைவயும் இடம் மாற்றப்படுகின்றனவா என்று எம்மிடம் விசாரித்துள்ளனர். தயாரிக்கப்பட்ட மாதிரியின்படியும் வரைபடங்களின்படியும் இக்கட்டிடம் முற்றுமுழுதாக சர்வ நிர்வாக செயலகப் பகுதிகளை உள்ளடக்கிய மாநகராட்சிமன்றச் செயலகமாகவே இருக்குமென்பதையும், இதில் நகர மண்டபம் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நகரமண்டபம் தொடர்ந்தும் முன்னைய இடத்திலேயே நவீன முறையில அமைக்கக்கூடிய நடவடிக்கைகள் காலப்போக்கில் எடுக்கப்படலாம்'' என்று மாநரசபை ஆணையாளர் திரு. சி வி.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

''சுப்பிரமணியம் பூங்காவைக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஒரு பூங்காவை நல்லூரில் அமைப்பது என்ற எண்ணமே எமக்கில்லை அதேபோல திறந்தவெளியரங்கையும் கைவிடுவதாகவோ அல்லது அதற்குப்பதிலாக ஒரு அரங்கை நல்லூரில் அமைப்பதாகவோ இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. நூலகத்தைப் பொறுத்தவரை தற்போது நல்லூரில் இயங்கும் கிளை நூலகத்திற்கு ஒருநிரந்தரக்கட்டடம் அமைக்கப்படுமே தவிர அது பொது நூலகக் கட்டிடத்திற்கு மாற்றுக் கட்டிடமாக அமையாது, என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்''

# ஸ்ரீ கண்ணகை அம்மன் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்]

கோப்பாய் வடக்கு பலானை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இம் மாதம் 31ம் திகதி நடைபெறவிருக்கும் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும் கிரியைகள் தொடர்ந்து ஒரு வாரகாலம் இடம்பெறவுள்ளது.

பிரதிஷ்டா குருமார்களாக சிவஸ்ரீ ப. முத்துக்குமாரஸ்வாமிக் குருக்களும் சிவஸ்ரீ சண்முகராஜாக் குருக்களும், சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்களும் சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியம் குருக்களும் பங்கேற்றவுள்ளார்கள்.

## வித்தியாலயம் இடம் மாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் திரு. எஸ். அனந்தராஜ அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் பருத்தித்துறை கூட்டு இராணுவ முகாமிற்கு அருகாமையில் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் அமைந்திருப்பதனுல் இன்றைய பதற்ற நிலையில் மாணவர்கள் வித்தியாலயத்திற்குச் செல்ல முடியாமல் இருபதனுலேயே வித்தியாலயம் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

மாதம்: தை
திகதி: 12 (1986-1-25)
கிழமை: சனி
திதி: பூரணை முழுநாளும்
நட்சத்திரம்: புநர்பூசம் பிற்பகல்வரை

மேடம்: முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும். இனிமையான செய்திக்கும் இடமுண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும்.

இடபம்: அதிர்ஷ்டகரமான தினம் சிலர் வாழ்க்கையில் திரவியலாபத்துக்கு இடமுண்டு, சகோதரபாசம் தலை தூக்கி நிற்கும்.

மிதுனம்; இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும். பொறுமையைப் பேணி நடக்கவும்.

கடகம்: இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும். உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரும்.

சிங்கம்; பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். கொடுக்கல் வாங்கல்மூலம் ஆபத்துக்கு இடமுண்டு.

கன்னி: உணர்ச்சிமயமான தினம். மனப்போராட்டங்கள் அதிகரிக்கும். உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

துலாம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். முன்னேற வழியும் தோன்றும். தாய்வழியாலும் நன்மை உண்டு.

விருச்சிகம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். நீண்டநாள் பிணிநிவர்த்தியாவதற்கும் இடமுண்டு.

தனுசு; பகைமூட்டம் தோன்றும். பதட்டம் உடன் சேரும். மிகையான போக்கினுலே மனதும் பாழாய்ப் போகும்.

மகரம்: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். திடீர் பிரயாணத்திற்கும் இடமுண்டு. சுகாதாரம் வேண்டும்.

கும்பம்: ஆதரவு கொடுத்தவரே முதலில் கையைவிரிக்கக் கூடும். கடன்தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

மீனம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் வேண்டும். மனத்திடம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

[புங்குடுதீவு இருபிட்டி அரியநாயகபுலம் அருள்மிகு வீரகத்தி விநாயகராலய தேர்த் திருவிழா இன்று. சுமார் மூன்றரை லட்சரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரில் விநாயகர் இன்று எழுந்தருளுவார்.]

## தவம்பொலி திருநாள்

சைவமும் தமிழும் சால்புறத்தழைத்து
சற்குரு நெறியில் நின்று
பவ்வியமாய்த் தமிழ்ப்பண்பாடு காத்து
பாரினில் உயர்ந்து வாழ்வோர்
கவ்விய கருணைமூர்த்தியாம் கணபதி
நாமம் கொண்டருள் நல்கும்
திவ்விய தலமாமரிய நாயகன்புலமதில்
திருமிகு சித்திரத்தேர் விழாவின்றே

விரைந்து வேண்டுமருள் வழங்கு
வீரகத்தி விநாயகர்—வெந்து
கரைந்துருகு மடியார் கவலைபோக்கி
கருணை பொழியு முளத்துடன்
நுரைகடல் மோதிடுமிரு பிடி
ஊர்மிசை உவப்புடன் எழுந்து
தரையிடை ஊர்ந்து தன்
தவம்பொலிவு தரு நாளின்றே.

-சத்தியமணாளன்.

## ''முன்னோரை உதாரணம்கொண்டு பணியாற்றுவோம்''

(புங்குடுதீவு)

'மன்னராட்சிக் காலங்களில் மக்கள் சேவையும் மகேசன் சேவையும் ஒன்றுகவே செயல் பட்டன. ஆலயங்களில் பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றனவா என்று விசாரித்த அரசர்கள், மக்கள் சுபீட்சத்துக்குத் தேவையான மழை ஒழுங்காகப் பெய்கிறதா என்று கேட்கவும் தவறுவதில்லை. நாயன்மார்கள் கூட மக்கள் பணி செய்யத்தவறவில்லை. அப்பூதியடிகள் தண்ணீர்ப் பந்தல்கள் நடத்தவும் தர்மகைங்கிரியங்கள் செய்யவும் காரணமாயிருந்தவர் நாவுக்கரசரே. புலவர்களின் வறுமையைத் தீர்த்த புரவலர்கள் பலரை சங்கலாலம் கண்டிருக்கிறது. பிற்காலத்தில் ஆறுமுகநாவலர் போன்ரோர் சைவப்பணியோடு, பிடியரிசித் திட்டமூலமே பல பாடசாலைகளைத் தாபித்து நடத்தி அறிவுச் சேவையும் செய்தார்கள். சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் அரசியல், சமயம், கல்வி என்ற வகையில் மும்முனைச் சேவையே ஆற்றினுர்கள். இத்தகைய எமது முன்னோரை நாம் உதாரணமாகக் கொண்டு ஆலயப்பணிகளோடு மக்களின் அறிவுப்பசியையும்வயிற்றுப்பசியையும்தீர்க்கும் வகையில் செயலாற்ற முனைய வேண்டும்.''

புங்குடுதீவு இருபிட்டி அரிய நாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகராலயத்தில் சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவுக்குத்தலைமை தாங்கிப் பேசுகையில் தமிழர் கலாசாரக் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள், வித்துவான் பொன். அ. கனகசபை, புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் உரையாற்றிய இவ்விழாவில் சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பி நீர்வேலி ச. ஜெயராசாவுக்கு திரு. எஸ். கே. மகேந்திரன் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்க தொழிலதிபர் நா. சிவராமகுகன் கணையாழி வழங்கினுர். வர்ணம் தீட்டிய எஸ். கனகராசாவுக்கு தேர்த்திருப்பணிச் சபைப் பொருளாளர் திரு. அ. சோதிலிங்கம் பொன்னுடை போர்த்த, சிப்பி ச. ஜெயராசாவுக்கு திரு. க. பரராசசிங்கம் பொற்கிழிவழங்கினுர். ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. ஆ. பொன்னம்பலத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் சபைச் செயலாளர் மு. நடேஸ் நன்றியுரை நிகழ்த்தினுர்.

## ஞானப்பழனி ஆண்டவர் ஆலய மகா கும்பாபிஷேகம்

[கோண்டாவில்]

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேகமும் சங்குஸ்தாபனமும் நாளை நடைபெறும்.

நாளை அதிகாலை ஆறு மணிக்கு மஹா யாகத்துடன் கிரியைகள் ஆரம்பமாகும். காலை பத்து மணி அளவில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் தலைமையில், அருட்கவி விநாசித்தம்பி அவர்களும் சிவநெறிச் செம்மல் திரு. க. கனகராசா அவர்களும் மற்றும் சிவ அன்பர்களும் சங்குஸ்தானம் நிறைவு செய்வார்கள்.

## அபி. கூட்டத்தில் ஆலோசனை

[சுழிபுரம்]

பண்ணுகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் 28 ம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் வித்தியாலய மாணவரிடம் வசதிக் கட்டணமாக மாதம் 5 ரூபா அறவிடுதல், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த முதலிரு மாணவரிடம் முழுக் கட்டணத்தையும், மூன்ருவது மாணவரிடம் அரைக்கட்டணமும் அறவிடுதல் பற்றி ஆலோசிக்கப்படும்.

## கலாசார மன்ற நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை மேற்கு இந்து கலாசார மன்றத்தின் நடப்பு ஆண்டு நிர்வாக அறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் தி. குணபாலன், உப தலைவர் தி. பரந்தாமன், காரியதரிசி க. சிறிபாலன், உப காரிதரிசி கு. குகதாசன், தனுதிகாரி அ. சத்தியானந்தர், உப தனுதிகாரி சி. கிருபாகரன், நூலகர் அ. சத்தியானந்தர்.

## பாரதிபுரத்தின் முன்னேற்றம் கிராமமக்களில் தங்கியுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக சனத்தொகையுள்ள மிகப் பெரிய கிராமமாகிய பாரதிபுரத்தின் முன்னேற்றம் கருதி இங்கு வாழுகின்ற மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்'' என்று கிளிநொச்சி 155 ம் கட்டை பாரதிபுரம் கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய கிளிநொச்சிப் பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சிவகுமார் கூறினுர்.

சிறப்பு விருந்தினர்களாக கிராம சேவையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, கிளிநொச்சி பிரஜைகள் குழு உப செயலாளர் அ. தாமோதரம்பிள்ளை, திரு சி வி செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய நிர்வாகிள் தெரிவின் போது மா. கணபதி தலைவராகத் தெரிவானுர். உப தலைவர்களாக அ அந்தோனியும், திரு. எஸ். சுப்பிரமணியமும் செயலாளராக கோ. வரதராசனும், உப செயலாளராக பொ. கு. முத்தராசாவும், பொருளாளராக நா. முனுசாமியும், வழி நடத்துனராக எஸ். சின்னையா, எஸ். கறுப்பையா ஆகியோரும் கணக்குப் பரிசோதகராக வே. விஜேரட்ணமும் தெரிவானுர்கள்.

## 'மக்களின் ஒத்துழைப்பு வைத்தியசாலையை உயர்த்தியது'

[கிளிநொச்சி]

''கிளிநொச்சி அரசினர் மாவட்ட வைத்தியசாலையை முன்னேற்ற கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பலவித சேவைகளை ஆற்றியுள்ளேன். ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையின் மேலான ஒத்துழைப்புடன், பொதுமக்களின் நல் ஆதரவுடனும் எக்ஸ்ரே பிரிவு ஆரம்பிக்கவும், சுற்றுமதிலைக் கட்டவும், பிரேதப் பரிசோதனை அறையைக் கட்டவும், அழகான ஆலயமொன்றை அமைக்கவும் முடிந்தது'' என்று கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி கோப்பாய்க்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் மாவட்ட வைத்திய அதிகாரி பி. நவரெத்தினராசா ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையின் விசேஷ கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினுர்.

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபையின் சிரேஷ்ட உப தலைவரும், பிரஜைகள் குழுவின் உப தலைவருமான டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி, ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபைச் செயலாளர் ரி. எஸ். தர்மசிங்கம், கிராமசேவையாளர் எஸ். தனபாலசிங்கம், எம். சிவபாலன், தொழில்நுட்ப உத்தியோகத்தரும், சங்கச் செயலாளருமான எஸ். திருக்கேதீஸ்வரன், திரு. கே பாக்கியநேசன், திரு. ஞா. அந்தோனிப்பிள்ளை உட்படப் பலர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நவரெத்தினராசாவின் சேவையைப் பாராட்டிப் பேசினுர்கள்.

## ஆஸ்பத்திரியில் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் நேற்றிரவு 8 மணியளவில் இரு பிராணவாயுச்சிலிண்டர்களை இனந்தெரியாத நபர்கள் கொள்ளையடித்துள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (ய. மா)

உ
மீனாட்சி அம்பாள் துணை
யாழ். கொட்டடி (பண்ணை)
ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம்



இரதோற்சவம்: (25-01-86) சனி.
தீர்த்தோற்சவம்: (26-01-86) ஞாயிறு.
பூங்காவனம்: (27-01-86) திங்கள்.
காலை அம்பாளிற்கு பூம்புனல் நீராட்டு விழாவும்,
மாலை திருக்கல்யாண வைபவமும் நடைபெறும்.
இதனைத்தொடர்ந்து பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும்.
இங்ஙனம்:
அம்பாள் அடியார்கள்.
[C 374]

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## இந்திய மீனவர் கைது!

(கொழும்பு)

நான்கு இந்திய மீன்பிடிப் படகுகளுடன் அதில் இருந்தவர்களும இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்கள் செவ்வாய்கிழமை இராமேஸ்வரத்துக்கருகில் மீன் பிடித்துக்கெ ண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-செ)

# 600 தமிழர் கொல்லப்பட்டனர்; 400 பேர் படுகாயம்!

## கண்காணிப்புக் குழு செயல்பட்டகாலத்தில்

(சென்னை)

''இலங்கையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு செயல் பட்ட காலத்தில் சுமார் அறு நூறு தமிழ்மக்கள் இலங்கைப் பாதுகாப்பு படையினரால்படு கொலை செய்யப்பட்டுள்ளனர். 400 பேர் படுகாயமடைந்த னர் தமிழர் ளின் 200 கோடி ரூபா பெறுமதியான சொத் துக்களுக்கு ்சதம் விளைவிக்கப் பட்டுள்ளது'' என்று சென்னை 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை தற்போது பாகிஸ்தானில் தங்கியிருக்கும் இந்திய வெளியுறவு அமைச் சின் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி நாடு திரும்பியதும் இலங்கை வருவதற்கான ஏற் பாடுகளை மேற்கொள்வார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாத இறுதிப் குதியில் திரு. பண்டாரி இலங்கை வர லாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. அதேநேரத்தில் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு அடிப்படை யாக அமையும் சில முக்கிய விடயங்கள் குறித்து இலங்கை அரசு இந்திய அ சுக்கு தெளிவு படுத்தும் நிலையில்தான் பண் டாரி இலங்கை வருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகி றது.

இதேவேளை இந்திய மத்திய அரசு தற்போது சென்னையி லுள்ள தமிழ்த்தீவிரவாததலை வர்களுடனும், தமிழர் விடு தலைக் கூட்டணித் தலைவர்களு டனும், தொடர்புகொண்டு வருகிறது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் கடந்த 21ம் திகதி புதுடில்லி சென்றுள் ளார். இதேபோன்று ஏனைய விடுதலை இயக்கத் தலைவர் களும் விரைவில் புதுடில்லி செல்லவுள்ளனர், இவர்கள் ரொமேஷ் பண்டாரியுடன் பேச்சுநடத்துவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வடமாகாண ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளில் இராணுவ முகாம் கள் வைத்திருப்பதும், ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத் தைப் பிரகடனப்படுத்தியிருப் பதும் அரசின் அராஜகப் போக்கையே காட்டுகிறது. இதனால் யாழ்.மாவட்டத்தில் கல்வி அன்றாட வாழ்க்கை, தொழில்துறை அனைத்தும் பாதிக்கப்படுவதோடு பொது மக்களின் உயிர், உடைமை கள் பறிக்கப்படும்நிலை மேலும் அதிகரிக்கும். பாதுகாப்பு வல யப் பிரகடனத்தை உடனடி யாக வாபஸ் பெறவேண்டும் என்றும், இராணுவத்தினரை முற்றாக வாபஸ் பெற்று மக் கள் அன்றாட, அமைதியான வாழ்வை மேற்கொள்வதற்கு இராணுவ நடவடிக்கைகளுக் குப் பதிலாக அரசியல்தீர்வைக் காணவேண்டுமெனவும் கிளை வற்புறுத்துகின்றது''.

வடமாகாண ஆசிரியர் சங் தின் சார்பாக அதன் செய லாளர் திரு. வே சிவராச வெளிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிக்கப் பட்டுள்ளது.

''இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டதன் காரண மாக ஏற்கனவே பல பாட சாலைகள் மூடப்பட்டும், தகர்க் கப்பட்டும் உள்ளன. புதிய பாதுகாப்புவலயப் பிரகடனத்தினால் யாழ் நகரில் மட்டும் பத்துக்கும் அதிகமான பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள் ளன? இதன் காரணமாக ஏற் கனவே சீரழிவிற்கு உட்பட் டுள்ள இப்பிரதேச மாணவர்க ளின் கல்வி மேலும் மோச மான நிலைக்குத் தள்ளப்படும். ஆசிரியரும், பெற்றோரும் கல்விமான்களும் இதனை நிறுத் துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்ற தீர்மானம் அண்மையில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்க வட பிரதேசசெயற்குழுக் கூட்டத் தில் நிறைவேற்றப்பட்டது.

## இந்த ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன

(கொழும்பு)

அண்மையில் ஆசிரியர்க ளாக நியமனம் பெற்று ஆசிரி யர் முன்சேவைப்பயிற் சியை முடித்துக்கொண்டவர் களுக்கான ஆசிரியர் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர்கள் மேற்படி கடி தத்தை பெற்றுக்கொண்டதும் குறித்த மாவட்டக் கல்விப் பணிப்பாளரிடம் சென்று பாடசாலையை அறிந்து கொண்டு குறிப்பிட்ட பாட சாலைக்குச் சென்று தமது கட மையைப் பொறுப்பேற்க வேண்டும்.

இத்தகைய கடிதங்கள் தாமதமாகக் கிடைத்தாலும் தமது பகுதிகளுக்குச்சென்று கடமையைப் பொறுப்பேற்ப கான ஒழுங்கை கல்விச்சேவை ஆணைக்குழு செய்துள்ளது.

## தைப்பூசத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீசெந் தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9-00மணிக்கு விசேஷ அபிஷேகமும் அத னைத்தொடர்ந்து வசந்த மண் டப பூஜையும் செந்தில்குமரன் வள்ளிதேவசேனை சமேதராக உள்வீதி வலம் வருதலும் இடம் பெறும். நண்பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூஜையும் (அன்னதானம் நடைபெறும்.

## எம். ஜி. ஆரின் அமைச்சுக்கள் கைமாறுகிறது

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திர னின் அமைச்சுகளில் சில, மூன்று அமைச்சுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது

நிதியமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியனுக்குபொதுநிர் வாகத்துறையும், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பனுக்கு பொதுத் துறை, மாவட்ட வருவாய்த் துறை, செய்தி விளம்பரம் திரைப்படத் தொழில் நுட் பம் ஆகியதுறைகளும் சட்ட அமைச்சர் திரு. பொன்னைய னுக்கு துணைமாவட்ட ஆட்சித் தலைவர் அமைச்சும் பகிர்ந்த கப்பட்டுள்ளது.

## இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்துமேற் கொள்ளப்பட்ட பீரங்கிக் குண்டுத் தாக்குதலில் படுகாய மடைந்து யாழ் ஆஸ்பத்திரி ரில் சிகிச்சைபெற்ற ஞான தேவி வாமதேவன் (25வயது) என்பவரும், துப்பாக்கிச்சூட் டுக்கிலக்கான விஜயகுமார் 25வயது) என்பவரும் நேற்று மரணமானார்கள்.

## பீரங்கி வேட்டுக்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள கல் லடி இராணுவ முகாமில் பீரங்கிகள் நேற்றுப்பகல் இரண்டு மணியளவில் பரிசோ தனைக்காக வெடிக்கவைக்கப் பட்டன.

## லொறிகடத்தல்

(முல்லைத்தீவு)

தண்ணீரூற்றில் வைத்து, இனம் தெரியாத நபர்களினால் நேற்றுமுன்தினம் முல்லைத் தீவுக்குச் சென்று கொண்டி ருந்த ஒட்டுசுட்டான் ப. நோ. கூ. சங்க லொறி கடத்தப்பட் டுள்ளது.

முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு விறகு, உணவுப் பொருட்கள் கொண்டு செல் லும் பொழுது லொறி கடத் தப்பட்டதாகத் தெரிய வரு கிறது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Tegram, Eelanadu, Telephone, 22 89, 24126.

## இரவோடு இரவாக மறைந்த மலைவேம்புகள்

(சுண்டுக்குளி]

யாழ். செயலக பழைய பூங்காவில் நேற்றுமுன்தின மிரவு இரண்டு பாரிய மலைவேம்புகள் கோஷ்டி ஒன்றி னால் கடத்திச்செல்லப்பட்டுள்ளன.

யாழ் பழைய பூங்காவில் காவலாளிகள் நால்வர் கடமையில் ஈடுபட்டிருந்தபோது இரவு 10-30 மணி யளவில் வாளினால் அரியும் சத்தம் கேட்டதாகவும், அச்சமயத்தில் ''கள்ளன் கள்ளன்'' என்று காவ லாளிகள் சத்தமிடவே அவர்களை நோக்கி பாரிய வாளுடன் சுமார் 25 பேர் வந்து சத்தமிடாமல் இருக்கும்படியும், சத்தமிட்டால் இதே வாளினால் அரிந்துவிடுவோம் என்றும் கூறிவிட்டுச் சென்று தொடர்ந்து மரங்களை அரிந்தார்களாம்.

வேருடன் நின்ற இரு மரங்களையும் அரிந்து வீழ்த்தி அதன் கிளைகளை அகற்றிவிட்டு அடிமரங்களை மட்டும் அதிகாலை 4-30 மணியளவில் லொறி ஒன்றிலும் உழவு இயந்திரம் ஒன்றிலும் ஏற்றிச் சென்றுவிட்டன ராம்.

நூறு வருடங்களுக்கு மேற்பட்ட வயதுடைய இந்த மரங்களின் பெறுமதி சுமார் ஐம்பதினாயிரத்திற்கும் மேலாகும் என்றும் கூறப்படுகிறது.

## பலாலி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி

லிட்டி ஆகிய கிராமங்களில் உள்ள ஒருபகுதி மக்களுக்கே இக்கதி நேர்ந்தது.

கடந்த 18ம் திகதியும் தொடர்ந்து 23ம், 24ம் திகதி களிலும் இடம்பெற்ற இராணு வத்தினரின் துப்பாக்கிச்சூடு, ஹெலிகொப்டரிலிருந்து துப் பாக்கிச்சூடு, குண்டுவீச்சு. முகாமிலிருந்து பீரங்கிவேட்டு கள்பிரயோகம் போன்ற பயங் கர சம்பவங்களால் இழந்த உயிரிழப்புகள், படுகாயங்கள், உடைமைகள் அழிப்பு ஆகிய வற்றைத்தொடர்ந்து அப் பகுதிமக்கள் வெளியேறுகின்ற னர்.

கட்டுவன் கிராமமக்கள் ஏழாலை தெற்கு அ. மி. தமிழ்க்கலவன் பாடசாலையி லும் ஏழாலை மத்திய மகா வித்தியாலயத்திலும், கோட் டைக்காடு அ. த. க. பாட சாலையிலும் அகதிகளாகத்தஞ் சம்புகுந்துள்ளனர். சுன்னாகம் ஐயனார் கோவிலிலும் அகதி கள் இருக்கின்றனர்.

பொதுப்பணி மன்றம், முத் தமிழ்மன்றம், பிரஜைகள்குழு பொதுமக்கள் அகதிகளுக்கான சகலவசதிகளையும் செய்துவரு கின்றனர்.

உடுவில் உதவி அரசாங்க அதிபரும், ஏழாலை கிராம சேவையாளர், விசேஷசேவை அலுவலர் ஆகியோர் அகதி கள் இருக்கும் பாடசாலைகளைப் பார்வையிட்டுள்ளனர். [மா]

## வலி வடக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரியிலும், மற்றவர் தெல் லிப்பழை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வி. பாலசிங்கம் [40 வயது] இவருக்கு தலையில் படுகாயம் சுப்பிரமணியம் [42 வயது] இவருக்கு காலில்காயம்.

நேற்றுக்காலை 7மணியளவில் ஹெலிக்கொப்டர்த தாழ்வாக பறந்து தெல்லிப்பழையில் நேற்றுமுன்தினம் துப்பாக் கிச்சூட்டுச் சம்பவம் இடம் பெற்றபகுதி உட்பட அப்பகு தியை படம்பிடித்துச் சென் றுள்ளதாம். அடுத்துகாலை 10 மணியளவில் நான்கு கைக் குண்டுகள் வெடிச்சத்தம் கேட்டது அதனைத்தொடர் ந்து ஹெலிகொப்டர் வட்ட மிட்டு தெல்லிப்பழை பகுதி யில் தரையை நோக்கி ஒரு மணித்தியாலமாக துப்பாக்கி யால் சுடத்தொடங்கியது. இப் பகுதிகளில் எஞ்சியிருந்த மக் களும் பீதியினால் நாலாபக்க மும் சிதறி ஓடத்தொடங்கி னர் அடுத்து குரும்பசிட்டி, கட்டுவன், வசாவிளான் பகு யிலும் ஹெலிகொப்டர் மூலம் சுடத்தொடங்கியது. இடையிடையே குண்டு வீச் சும் இடப் பெற்றதாகத் தெரி விக்கப்படுகிறது. (மா)

## ஒய்வூதிய திகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா ஸ்ரேடி யத்தில் ஒய்வூதியம் பெறுப வர்களுக்கு இம்மாதம் 27 ம் திகதிமுதல் தைமாத ஒய்வூதி யம் ஸ்ரேடியத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக யாழ். தபால் அதிபர் அறிவித்துள் ளார்.

27ம் திகதி திங்கள். சாவகச் சேரி, வட்டுக்கோட்டை, கைதடி, புங்குடுதீவு

28ம் திகதி செவ்வாய்: சுன் னாகம், உரும்பராய், கோப் பாய், வண்ணார்பண்ணை.

29ம்திகதி புதன்: கரவெட்டி காங்கேசன்துறை, வல்வெட் டித்துறை, ஊர்காவற்றுறை.

30ம் திகதி வியாழன் பருத் தித்துறை, மானிப்பாய், வசா விளான், சுழிபுரம்.

31ம் திகதி வெள்ளி: யாழ்ப் பாணம், கொக்குவில், தெல் லிப்பழை, பண்டத்தரிப்பு. (ச)

## மரண அறிவித்தல்

### நாகநாதர் வேலுப்பிள்ளை

இணுவில் (கோயில்வாசல்) சந்தியைச் சேர்ந்த நாக நாதர் வேலுப்பிள்ளை அவர்கள் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், திருமதி நாகரத்தினம் குணரத்தினம், திருமதி சிவபாக் கியம் இராசரத்தினம் (ஆசிரியை, இணுவில் சை. ம. ம. வித்தியாலயம்) திரு சுப்பிரமணியம் (R. M. P. புத்தளம்), திருமதி இராசலட்சுமி கணபதிப்பிள்ளை (அதிபர், தாவடி இ. த. க. பாடசாலை), திரு, நாக ராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. குணரத் தினம், திரு. இராசரத்தினம் (மன்னார் ஆஸ்பத்திரி), மங்களேஸ்வரி, திரு.கணபதிப்பிள்ளை (அதிபர் மதியா மடு அ. த. க பாடசாலை), பாக்கியலட்சுமி ஆகியோ ரின் அன்பு மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் (இன்று) 25-01-86 நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (A 376)